## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.6/2018

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மோகன் | மதம் | : இந்து |
| த/பெ | : நீலகண்டன் | ஜாதி | : -- |
| வயது | : 45 | கிராமம் | : எட்டியாந்தாங்கல் |
| தொழில் | : தனியார் நிறுவனம் | வட்டம் | : திருத்தணி |

**30.01.2026**

**பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. இந்த வழக்கின் வாதி ஜெயராமனை எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் 40 வருடங்களாக தெரியும். அவரது அண்ணன் வீரராகவலுநாயுடுவை எனக்கு தெரியும் என்றால் சரிதான். வாதியின் அண்ணன் வீரராகவலுநாயுடுக்கு எட்டியாந்தாங்கலில் சொத்துக்கள் உள்ளது என்றால் ஆமாம். இந்த வழக்கில் பிராதை படித்து பார்த்தேன் என்றால் ஆமாம். பிராதில் உள்ள விவரங்கள் தெரியும் என்றால் ஆமாம். 15.02.2017 ல் வீரராகவலுநாயுடு அவரது தம்பி ஜெயராமனுக்கு செட்டில்மென்ட் ஆவணம் எழுதி வைத்தார் என்றால் ஆமாம். அந்த செட்டில்மென்ட் ஆவணத்தை நான் இதுவரை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை. வாதிதான் வழக்கு சொத்தான செட்டில்மென்ட் ஆவணத்தில் உள்ள சொத்து முழுமையும் அனுபவித்து வருகிறார் என்றால் ஆமாம்.

2. அந்த சொத்தின் பட்டா எண் 240 வாதிபெயரில் உள்ளது என்றால் ஆமாம். வீரராகவலுநாயுடு செட்டில்மென்ட் ஆவணம் எழுதுவதற்கு முன்பு வீரராகவலுநாயுடு பயிர்வைத்து அனுபவித்து வந்தார் என்றால் ஆமாம். அந்த விவசாய நிலங்களுக்கு 13/3 C தற்போதைய புல எண் 13/3 C1 ல் ஆழ்துளை கிணறு அமைத்து விவசாயம் செய்து வந்தார் என்றால் புல எண் 13/3 C ஜெயராமன் பெயரில் உள்ளது. அதில் கிணறோ, ஆழ்துளை கிணறோ இல்லை. புல எண் 13/3 C கிணறோ, ஆழ்துளை கிணறோ இல்லை என்பதை எனது முதல் விசாரணையிலோ எதிர் வழக்குரையிலோ

சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.  எனது எதிர்வழக்குரை பத்தி 12 ல் புல எண் 13/3 C ல் ஆழ்துளை கிணறு இருப்பதாக ஒப்புகொண்டுள்ளேன் என்றால் அந்த புலஎண்ணில் இல்லை.  அது அந்த புலஎண்ணிற்கு வெளியே ஆற்றின் ஓரத்தில் உள்ளது.  வாதிக்கு சொந்தமான புலஎண் 9/6 ல் ஒரு ஆழ்துளை கிணறு உள்ளது என்றால் ஆமாம்.

3. வாதி இரண்டு ஆழ்துளை கிணறுகளில் இருந்தும் நீர் எடுத்து தனது நிலத்திற்கு விவசாயத்தில் பயன்படுத்துகிறார் என்றால்  புலஎண் 9/6 ல் உள்ள ஆழ்துளை கிணற்றை மட்டும் பயன்படுத்துகிறார் புலஎண் 13/3C ஆழ்துளை கிணறு இல்லை.  அது அந்த புலஎண்ணிற்கு வெளியே ஆற்றின் ஓரத்தில் உள்ளது. புலஎண் 13/3C1 ல் ஆற்றை ஒட்டி ஆழ்துளை கிணறு உள்ளதா என்றால் அந்த புலஎண்ணிற்கு வெளியே ஆற்றை ஒட்டி உள்ளது.  இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை அளக்க வந்தார் என்றால் ஆமாம். அன்றைய தினம் நான் அங்கு இருந்தேனா என்றால் இருந்தேன்.

4. நீதிமன்ற ஆணையர் இரண்டு ஆழ்துளை கிணறுகளையும் பார்வையிட்டு அறிக்கை வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம். நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு நான் ஆட்சேபணை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.  ஆஞ்சியம்மாளுக்கும் சரோஜாம்மாளுக்கும் சொந்தமான நிலங்கள் என்ன என்று சொல்லமுடியும் என்றால் முடியும்.  சரோஜம்மாளுக்கு புலஎண் 13/1A , 13/1B ஆகும். ஆஞ்சியம்மாளுக்கு புலஎண் 13/1C ஆகும்.  ஆஞ்சியம்மாளுக்கு சொந்தமான புலஎண் 13/1C ன் விஸ்தீரனம் சொல்லமுடியுமா என்றால் 3 ஏக்கர் 75 சென்ட் ஆகும்.  ஆஞ்சியம்மாள் எப்போது இறந்தார் என்றால் 20.12.2017 ல் இறந்தார்.

5. ஆஞ்சியம்மாள், சரோஜாம்மாள், நரசிம்மலுநாயுடு, முத்தம்மாள், கோவிந்தநாயுடு, துரைசாமி, பீமன் ஆகியோர் நிலங்கள் வழியாக பூமிக்கு அடியில் வீரராகவலு குழாய் அமைத்து தனது நிலத்திற்கு நீர் அமைத்து சென்றார் என்றால் ஆமாம்.  ஆனால் அந்த சமயம் அவர் யாரிடமும் அனுமதி  கேட்காமல் குழாய் அமைத்தார்.  அவருக்கு அந்த சமயம் மின்இணைப்பும் இல்லை.  அவர் மின்சாரத்தை அனுமதியின்றி எடுத்து பயன்படுத்தி வந்தார்.  இதுகுறித்து நான் மின்வாரியத்தில் புகார் அளித்து அவர் அதற்கு அபராதம் செலுத்தியுள்ளார்.  அதன்பின்பு ஊர்பஞ்சாயத்தில் பேசியபோது  குழாய்களை 6 மாதத்தில் எடுத்துவிடுவதாக சொன்னார்.  அதன்பின்பும் அவர் எடுக்காததால் பஞ்சாயத்தில் முறையிட்டோம். உன்னால் முடிந்ததை பார்த்துகொள்ளு என்று சொல்லிவிட்டார்.

6. அவர் குழாயை அகற்றமுடியாது என்று சொல்லியபிறகு காவல் துறையில் புகார்

கொடுத்தேனா என்றால் ஆமாம். அது எந்த வருடம் என்றால் 2018 ஆகும். அதன் பின்புதான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் ஆமாம். காவல் துறையில் புகார் செய்தபோதும் குழாயை அகற்ற காலஅவகாசம் கேட்டார் அதன்பின்பும் அகற்றாததால்தான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன். காவல்துறையில் யார்புகார் கொடுத்தார் என்றால் நான்தான் கொடுத்தேன். நான் கொடுத்த புகார் மனுவோ, காவல்துறை விசாரணையின் அறிக்கையோ கால அவகாசம் கேட்டதற்கான ஆவணங்களையோ நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

7. குழாயை அகற்றாவிட்டால் ஜெயராமன் மீது வழக்கு பதிவு செய்யபோவதாக மிரட்டினார்கள் என்றால் இல்லை. ஜெயராமனே குழாயை அகற்றிவிடுவதாக சொல்லிவிட்டார். காவல் துறையினர் தன்னை மிரட்டுவதாக ஜெயராமன் திருவள்ளூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தார் என்றால் அவர் கொடுக்கவில்லை. காவல்துறையினர் அவரை மிரட்டவில்லை.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)